வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 12.3.2025 நேரம் மாலை 6.10 மணி

--------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் 72-ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்து கொண்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு மொரீசியஸ் நாட்டின் மிக உயரிய விருதான Grand Commander of the order of the star and key of the Indian Ocean விருது வழங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி அரசு தொழிலாளர் துறை சார்பில் வரும் 15-ஆம் தேதி சனிக்கிழமை வேலை வாய்ப்பு முகாம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி, 2025-26-ஆம் நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கையை இன்று தாக்கல் செய்தார்.

திரவுபதி முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக் கழகதின் 72-ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர் கடந்த 140 ஆண்டுகளில் இப்பல்கலைக் கழகம் உயர்கல்வி, விளையாட்டு, ஆராய்ச்சி. மற்றும்

கலாச்சாரத் துறைகளில் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கி உள்ளதாக தெரிவித்தார். வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை முன்னிறுத்தி தேசியக் கல்விக் கொள்கையின் அம்சங்கள் இப்பல்கலைக் கழகத்தில் நடைமுறைப் படுத்தப் படுவதற்கு அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

*பிரதமர்-விருது*

சமூக பொருளாதார வளர்ச்சிப் பாதையில் இந்தியாவும் மொரீசியசும் நட்புறவு நாடுகளாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அந்நாட்டின் தேசிய தினக் கொண்டாட்டங்களில் இன்று உரையாற்றிய பிரதமர் மொரீசியஸ் நாட்டில் அமைய உள்ள புதிய நாடாளுமன்ற வளாகத்திற்கு இந்தியா தமது பரிசாக உரிய ஒத்துழைப்பை வழங்கும் என்று கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு மொரீசியஸ் நாட்டின் மிக உயரிய விருதான Grand Commander of the order of the star and key of the Indian Ocean விருது வழங்கப்படும் என அந்நாட்டு பிரதமர் திரு நவீன் சந்திர ராம்கூலம் அறிவித்துள்ளார். Port louis நகரில் இந்திய வம்சாவளியினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அந்நாட்டு பிரதமர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். அப்போது பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி மொரீசியஸ் அரசு மற்றும் மக்கள் சார்பில் தமக்கு

அளிக்கப்பட்டுள்ள இந்த விருது தனிப்பட்ட கவுரவம் அல்ல என்றும் இந்தியா-மொரீசியஸ் இடையேயான வரலாற்று ரீதியான பிணைப்புக்கு கிடைத்த கவுரவம் என்றும் தெரிவித்தார். மொரீசியஸ் நாடு மினி இந்தியா போல திகழ்வதாக கூறிய பிரதமர் இந்தியாவின் சாகர் கொள்கையில் மொரீசியஷ் முக்கிய இடம் பெற்றிருப்பதையும் சுட்டிக் காட்டினார். இன்று இருநாட்டு தலைவர்களிடையே நடைபெற்ற உயர்மட்ட பேச்சு வார்த்தையின் போது 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

வேலை வாய்ப்பு முகாம்

புதுச்சேரி அரசு தொழிலாளர் துறை சார்பில் வரும் 15-ஆம் தேதி சனிக்கிழமை வேலை வாய்ப்பு முகாம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. லாஸ்பேட்டை அரசு பெண்கள் பொறியியல் கல்லூரி வளாகத்தில் காலை 9 மணி முதல் மாலை 3.30 மணி வரை நடைபெற உள்ள இம்முகாமில் புதுச்சேரி மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த 40 தனியார் நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன. விருப்பம் உள்ளவர்கள் கல்வித் தகுதிக்கான தங்களது உண்மை மற்றும் நகல் சான்றிதழ்களுடன் முகாமில் பங்கேற்று பயன் பெறலாம் என்று அத்துறையின் இயக்குநர் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி-பட்ஜெட்

புதுச்சேரி அரசின் 15-ஆவது சட்டப் பேரவையின் 6-ஆவது கூட்டத் தொடரின் 3-ஆம் நாளான இன்று நிதி துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு ரங்கசாமி, 2025-26-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்தார்.

2025-26-ஆம் நிதியாண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு 13 ஆயிரத்து 600 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் இதில் 11 ஆயிரத்து 624.72 கோடி ரூபாய், வருவாய் செலவினங்களுக்காகவும் ஆயிரத்து 975.28 கோடி ரூபாய் மூலதன செலவினங்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் தெரிவித்தார். 2021-22 ஆம் நிதியாண்டின் மொத்த செலவினங்களில் 1.66 விழுக்காடாக இருந்த மூலதன செலவினம் இந்த நிதியாண்டில் 9.80 விழுக்காடாக கணிசமாக அதிகரித்துள்ளது என்றும் கூறினார்.

மகளிருக்கான சிறப்பு நிதியத்திற்காக ஆயிரத்து 458 கோடி ரூபாயும், இளையோர் சிறப்பு நிதியத்திற்காக 613 கோடி ரூபாயும் பசுமை சிறப்பு நிதியத்திற்காக 689 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

புதுச்சேரியின் அனைத்து பிராந்தியங்களிலும் கடலோரப் பகுதிகளில் தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு புயல் மற்றும் இயற்கை

இடர்பாடுகளால் ஏற்படும் இழப்பீடுகளை ஈடுகட்டும் வகையில் பிரிமியம் தொகையை தென்னை மரக் காப்பீட்டிற்கும் அரசே செலுத்தும் என்று தெரிவித்த முதலமைச்சர் புதுச்சேரி விவசாயத் தொழிலாளர் நலச் சங்கத்தில் பதிவு செய்துள்ள அனைத்து விவசாய தொழிலாளர்களுக்கும் மழை கால நிவாரணமாக வருடத்திற்கு 2 ஆயிரம் ரூபாய் வரும் நிதியாண்டு முதல் வழங்கப்படும் என்றும் கூறினார்.

பால் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு 50 விழுக்காடு மானியத்தில் 2 கறவை பசுக்கள் ஆயிரத்து 500 பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்றும், தேசிய கால்நடை இயக்க திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் கறவை பசுக்களை மத்திய அரசின் 85 விழுக்காடு பங்களிப்புடன் காப்பீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள மேலும் சில முக்கிய அம்சங்கள்

- அனைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கும் தற்போது வழங்கப்படும் இலவச அரிசியோடு 2 கிலோ கோதுமையும் இலவசமாக வழங்கப்படும்.
- புதுச்சேரி லிங்காரெட்டிபாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை தனியார் பங்களிப்புடன் மீண்டும் இயக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து இளங்கலை கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாக வரும் கல்வியாண்டு முதல் வழங்கப்படும்.
- மதிய உணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு தற்போது வாரம் 3 நாட்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வரும் முட்டை எதிர் வரும் கல்வி ஆண்டு முதல் அனைத்து பள்ளி நாட்களிலும் வழங்கப்படும்.
- அனைத்து அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் மாலை நேர சிற்றுண்டி அனைத்து பள்ளி நாட்களிலும் வழங்கப்படும்.
- சென்டாக் மூலம் தேர்வு செய்யப்பட்டு அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெறும் அனைத்து பாடப் பிரிவு மாணவர்களுக்கும் வரும் கல்வியாண்டு முதல் பெருந்தலைவர் காமராஜர் நிதி உதவி திட்டம் நீட்டிக்கப்படும்.
- மீனவர்கள் மேம்பாட்டு முகமையில் பதிவு செய்துள்ள 100 மீனவ பயனாளிகளுக்கு 12 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான இழுவை வலை 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும். மேலும் மீனவ பயனாளிகளுக்கு ஆழ்கடல் மீன்பிடி படகு 20 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்படும்.

- ஆயிரம் ரூபாய் அரசு உதவித் தொகை பெறும் அனைத்து குடும்ப தலைவிகளுக்கும் அந்த தொகை 2 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.
- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை மூலம் ஓய்வூதியம் பெறும் அனைத்து பிரிவினர்களுக்கும் 500 ரூபாய் உயர்த்தி வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.
- தாய் அல்லது தந்தையை இழந்து அரசு அல்லது அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும்

புதுச்சேரி-பட்ஜெட்

மாணவர்களுகசு மாதந்தோறும் 2 ஆயிரம் ரூபாயும் 6 முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாயும், 11 மற்றும் 12-ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு 4 ஆயிரம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வனம் மற்றும் வனமில்லாத பகுதிகளில் 3 லட்சம் மரக் கன்றுகளும் பள்ளிகளில் ஒரு லட்சம் மரக் கன்றுகள் நடவும்,திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னதாக தமது பட்ஜெட் உரையின் துவக்கத்தில் புதுச்சேரி அரசுக்கு ஆதரவு அளித்து வரும் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி நன்றி தெரிவித்துக் கொண்டார். மேலும் 15-

ஆவது சட்ட நேரலையில் தமது 5-ஆவது வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் கூறினார்.

முதலமைச்சர் தமது பட்ஜெட் உரையில் மேலும் கூறுகையில்.............

(வாய்ஸ்)

*சிவா*

இன்று தாக்கல் செய்யப்பட்ட புதுச்சேரி அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு சிவா செய்தியாளர்களிடையே பேசுகையில் புதுச்சேரி மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றாத வகையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறினார். மேலும் அவர் கூறுகையில்..........

(வாய்ஸ்)

*ஜிப்மர்*

தொடர்ச்சியாக ரத்ததானம் வழங்கும் தன்னார்வலர்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் நினைவு கேடயம் வழங்கும் பாராட்டு விழா புதுச்சேரி ஜிப்மர் வளாகத்தில் இன்று காலை நடைபெற்றது. ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் துரைராஜன்

புதுச்சேரி எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குநர் டாக்டர் சித்ராதேவி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் 72-ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்து கொண்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு மொரீசியஸ் நாட்டின் மிக உயரிய விருதான Grand Commander of the order of the star and key of the Indian Ocean விருது வழங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி அரசு தொழிலாளர் துறை சார்பில் வரும் 15-ஆம் தேதி சனிக்கிழமை வேலை வாய்ப்பு முகாம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி, 2025-26-ஆம் நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கையை இன்று தாக்கல் செய்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 12.3.2025/Script/

----------------------------